**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**
**முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.**
**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)**

Cr.M.P.No. 297/2026

**சங்கரன்கோவில் டவுண் காவல் நிலைய குற்ற எண்.77/26**
**பிரிவுகள் 303(2) BNS**
**உத்தரவு நாள்: 05.03.2026**
**CNR No. TNTS09-000647-2026**

லெட்சுமணன்,
த/பெ. ஆரோக்கியசாமி

... மனுதாரர்/எதிரி

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
சங்கரன்கோவில் டவுண் காவல் நிலையம்
குற்ற எண்.84/2026

... எதிர்மனுதாரர்/வாதி

**மனுநாள்: 03.03.2026 மனு 480 BNSS**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு பதில் பெறப்பட்டது.

2. மனுதாரர்/எதிரி தரப்பில், மனுதாரர்/எதிரி 02.03.2026 முதல் காவலில் இருந்து வருவதாகவும், அவர் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், அவர் கூலி வேலை செய்து வருபவர் என்றும், அவர் நிரந்த முகவரி உடையவர் என்றும், அவர் நீதிமன்ற நிபந்தனைக்கு கட்டுப்படுவார் என்றும், எதிரியை பிணையில் விடுவிக்கும்பட்சத்தில் தகுந்த பிணையதாரர்களை வழங்குவதாகவும், எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது. எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது.

3. அரசு தரப்பில், சங்கரன்கோவில் டவுண் காவல் நிலையம் காவல் நிலைய குற்ற எண். 77/2026 வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மேற்படி வழக்கின் எதிரியை பிணையில் விடும்பட்சத்தில், மீண்டும் இதுபோன்ற திருட்டுக் குற்றச் செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரி நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகமல் தலைமறைவாகக்கூடும் என்பதாலும், சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், மேலும், எதிரியின் செய்கையால் பொதுமக்களின் உடைமைக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடும் என்பதாலும், மேலும், எதிரி மீது கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 252/2021

பிரிவு 75(1)(C) TNCP Act (Disposed) உள்ளது என்றும், எனவே, மேற்படி எதிரியை ஜாமீனில் வெளியே விட கடுமையான ஆட்சேபணை தெரிவிப்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், மனுதாரர்/எதிரியானவர் 4 நாட்களாக காவலில் இருந்து வருகிறார் என்று தெரிய வருகிறது. இந்த வழக்கு புலன் விசாரணையில் இருப்பதாலும், வழக்கின் பொருண்மை மற்றும் குற்றத்தின் தீவிரத்தன்மையைக் கருத்தில் கொண்டும், மேற்படி எதிரியை பிணையில் விடுவித்தால் மீண்டும் இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவார் என்பதைக் கருதியும், வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைக்காமல் செயல்படுவார் என்பதைக் கருதியும், இந்த மனுதாரருக்கு எதிரான இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.05 17:43:08 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),
சங்கரன்கோவில்.